**தலைப்பு – 177 கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1 அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
| --- | --- |
| 206 | கலாசார அலுவல்கள் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் அமைச்சின் செயலாளருக்கும் திணைக்களத்தின் தலைவருக்கும் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளில் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 177 | கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சு | 2015 ஒக்தோபர் 09 |
| 206 | கலாசார அலுவல்கள் திணைக்களம் | 2015 செப்தம்பர் 23 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,913.69 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,556.17 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதிஏற்பாட்டிலிருந்து சேமிப்புக்கள் ரூபா 294.58

மில்லியன் முதல் ரூபா 62.94 மில்லியன் வரையான வீச்சில் அதாவது தேறிய நிதிஏற்பாட்டில் 22 சதவீதம் மற்றும் 11 சதவீதம் வீச்சளவினைக் கொண்டிருந்தன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **தலைப்பு** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள்** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** | |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| 177 | 1,322.34 | 1,027.76 | 294.58 | 22 |
| 206 | 5,91.35 | 528.41 | 62.94 | 11 |
| மொத்தம் | 1,913.69 | 1,556.17 | 357.52 | 19 |

## 2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்திற்குரிய அரச உத்தியோகத்தர்களுக்குரிய முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 17701 | 32.00 | 21.92 | 14.00 | 16.83 | 100.00 | 68.81 |
| 20601 | 19.00 | 15.14 | 8.00 | 11.09 | 60.00 | 43.28 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினதும் வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31.24 மில்லியனாக இருந்ததுடன், அது தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| கலாசார மற்றும் கலைகள் அலுவல்கள் அமைச்சு | 6000/0000/00/0015/0054/000 | 17.17 |
| கலாசார அலுவல்கள் திணைக்களம் | 6000/0000/00/0015/0088/000 | 14.07 |
| மொத்தம் | | 31.24 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சினதும் அதன் கீழான திணைக்களத்தினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. அம்முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து 4 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 177 – கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சு

### 3.1 ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் காணப்படாமை

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ள ஏடுகள் பேணப்படாமல் இருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப் பண) பேரேடு | நிதிப்பிரமாணம் 447 | பேணப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | பொது வைப்புப் பேரேடு | நிதிப்பிரமாணம் 569 | முறைப்படி நாளது வரையாக்கப்பட்டி ருக்கவில்லை. |

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 01 கணக்காய்வு ஐயவினாவிற்கும் 2015 யூலை 20 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்காததுடன், அந்த ஐயவினாவிற்குட்பட்ட கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 50,041,284 ஆக இருந்தது.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.3.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 62,500,000 ஆன தேறிய நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 11 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமை மற்றும் செயற்திட்டத்தை செயற்படுத்தாமை காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 40 சதவீதத்திற்கும் 95 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தன.

(இ) பேரலிய சுனாமி ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் கலாசார நிலையத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 20 மில்லியன் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 30 மில்லியன் தேறிய நிதிஏற்பாட்டிலும் 80 சதவீதத்திற்கு மேல் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கலைஞர்கள் விருது நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 8 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் 88 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டின் போது இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து 86 சதவீதம் வரையான அளவு வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

(உ) 364 கலாசார நிலைய அலுவலக உதவியாளர்கள் மற்றும் காவலாளிகளுக்காக சீருடை படிகள் கொடுப்பனவிற்காக ரூபா 1,456,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்தமையால் மீளாய்வாண்டின் போது அப்படிகளை செலுத்த முடியாமல் இருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

---------------------------------------------

பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 2,790,464 கூட்டுத்தொகையான 03 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

---

17701 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை 3,948,942 ஆக இருந்தது. அதில் ரூபா 1,503,518 தொகை 1 ஆண்டு முதல் 10 வரையான காலப்பகுதிக்குரியதாக இருந்தது. அந்நிலுவை கடன்

மீதிகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.6 நல்லாளுகையும் கணக்களிப்புப்பொறுப்பும்**

---

**உள்ளகக் கணக்காய்வு**

---

அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் நிறுவனங்களுக்குரிய உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான 5500 மொத்த மனித ஊழிய மணித்தியாலங்களில் 2900 மனித ஊழிய மணித்தியாலங்கள் அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட படி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு பரிசோதனைகள் பிரதானமாக பிரதேச கலாசார நிலையங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தன.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

பொது மக்கள் காட்சிக்கு திரைப்படங்களை விடுவிப்பதற்கு முன்னர் பிரபல தணிக்கை கட்டுப்பாட்டுச் சபையின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. திரைப்படங்களின் முதன்மைக் காட்சிகளை பார்வையிடுவதற்காக தணிக்கை கட்டுப்பாட்டுச் சபையிடம் சிறிய சினிமா கொட்டகையொன்று காணப்பட்ட போதிலும், அச்சினிமாக் கொட்டகைகளில் Digital Cinema Package வகையில் தயாரிக்கப்பட்ட திைப்படங்களை பார்ப்பதற்கான வசதிகள் காணப்படவில்லை. அதனால் வெளிநிறுவனங்களுக்குரிய சினிமா கொட்டகைகளில் அந்த ஆரம்ப காட்சிகளை அரங்கேற்றுவதற்கு நேர்ந்துள்ளது. 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைக்கப்பெற்றிருந்த 147 மொத்த திரைப்படங்களில் 99 அந்த

(DCP) வகை காரணமாக இச்சிறிய சினிமா திரையரங்கில் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்துதல்**

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அந்த அறிக்கை 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள் ரூபா 43,396,614 ஆக இருந்தது. கண்டி கலையரங்க நிர்மாணத்திற்காக காணி நிள அளவை திட்ட வரைபடத்தை தயாரிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,234,800 தொகை இப்பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 இணக்கமிண்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| XV ஆம் அத்தியாயத்தின் 10.4 ஆம் பிரிவு | - | 2014 ஆம் ஆண்டில் தாய்லாந்தில் வெசாக் தினக் கொண்டாட்ட சுற்றுலாவிற்காக நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கான கடிதத்தை பிரயாணத்திற்கு வெளியேறுவதற்கு 2 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப் பிரமாணம் 115 | 22,154,940 | மீளாய்வாண்டில் கலாசார நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 22,154,940 தொகையான வளவாளர் படிகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் சில பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணப்பட்டன. |
| (ii) நிதிப் பிரமாணம் 94 மற்றும் 447 | 43,396,611 | பொறுப்புக்களுக்கு கடப்பாடு மேற்கொள்ளும் போதும் பொறுப்புக்களை கணக்கீடு செய்யும் போதும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாணம் 128, 207(2), 138(1) மற்றும் 447(1) | 6,260,535 | 2014 செப்தம்பர் மாதத்தின் போது 29 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மூலம் செய்யப்பட்ட செலவினங்கள், உரிய செலவின விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் கலாசார நிலையங்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட செலவின விடயத்தின் கீழும் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரண செலவின விடயத்தின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. |
| (இ) | அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவை<br>-------------------------------------------<br>4.3 மற்றும் 4.3.2 ஆம் வழிகாட்டல் | 15,790,806 | மாதம்பே கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்குரிய மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மாவட்ட செயலகம் அல்லது பிதேச செயலகம் என்பவற்றினால் அவ்வப்போது தயாரிக்கப்பட்ட திருத்தங்கள் செய்யப்பட்ட கிரய மதிப்பீட்டின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 3.9 உள்நாட்டு நிதியளிப்புக்களின் கீழ் செயற்திட்டங்கள் அமுல்படுத்தல்

---

உள்நாட்டு நிதியளிப்புக்களின் கீழ் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது பின்வரும் நலிவுகள் கண்டறியப்பட்டன.

### (அ) உரித்தைக் கையேற்காமல் அமைச்சின் நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தியிருந்தமை

---

காணியின் அல்லது கட்டிடங்களின் உரித்தை அமைச்சிற்கு கையேற்காமல் பின்வரும் செயற்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவினம் | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|
| | ரூபா | | |
| மாதம்பே கலாசார நிலையம் | 15,790,806 | 7,709,560 | காணியின் சரியான உரித்து முறையாக கையேற்கப்பட்டிருக்க வில்லை. |
| சம்மாந்துறை கலாசார நிலையம் | 2,275,000 | 2,275,000 | காணி முறையாக கையேற்கப்பட்டிருக்கவில்லை. |
| திம்புலாகல கலாசார நிலையம் | தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை | 1,375,000 | கட்டிடங்கள் மற்றும் காணி முறையாக கையேற்கப்பட்டிருக்க வில்லை. |

**(ஆ) செயற்திட்டத்தை செயற்படுத்துவது தாமதமாகியமையால் மதிப்பிடப்பட்ட கிரயம் அதிகரித்தல்**

மாதம்பை பிரதேச செயலகப் பிரிவில் கலாசார நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2009 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்த கிரய மதிப்பீட்டின் படி ரூபா 6,592,435 ஆக இருந்த போதும், 04 வருடங்களின் பின்னர் 2012 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட ரூபா 15,790,806 ஆன திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டின் படி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமை**

ஆதிவாசி கிராமங்களைப் பாதுகாக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 10,000,000 ஆன மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி வேறு விடயத்திற்காக மாற்றப்பட்டமையால் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் போதியளவில் முன்னேற்றமடைந்திராத செயற்திட்டங்கள்**

பின்வரும் செயற்திட்டங்களுக்கு பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் போதியளவு செயன்முன்னேற்றம் அடைந்திருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | விடுவிக்கப் பட்ட நிதிஏற்பாடு | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|
| | ரூபா | | |
| வாகரை ஆதிவாசிகள் கலாசார நிலைய நிர்மாணம் | 2,000,000 | 400,000 | நிதி மற்றும் பௌதீக செயன் முன்னேற்றம் அறிக்கை இடப்பட்டிருக்கவில்லை. |
| ஹேனானிகல ஆதிவாசிகள் மக்கள் மரபுகள் கேந்திர நிலைய நிர்மாணம் | 9,863,012 | 1,972,602 | - மேற்படி - |

## 3.10 செயலாற்றல்

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ). நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட வருடம் தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 16 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், திம்புலாகலை கலாசார நிலையம் திறக்கப்பட்டு நிகழ்ச்சிகளை ஆரம்பிப்பதற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 1,375,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மன்னார் மாவட்டத்தின் பேசாலை அதிகாரப் பிரதேசத்தில் கலாசார நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக பிரதேச செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு மற்றும் அளவீட்டு பத்திரத்தின் படி நிர்மாணங்கள்

இடம் பெற்றிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சின் நிதி ஏற்பாடு ரூபா 1,887,901 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் நிலையத்தை திறப்பதற்கு போதுமான வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்நிலையம் திறந்து வைக்கப்படவில்லை.

(இ) மாதம்பை பிரதேச செயலகப் பிரிவிற்குள் கலாசார நிலையமொன்றை தாபிப்பதற்கு திட்டமிட்டு 2009 ஜுலை மாதத்தில் சாத்தியவள அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்ததுடன் நிலையப் பரிசோதனை மேற்கொண்டு செயற்திட்டம் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 15,709,806 தொகையான கிரய மதிப்பீட்டில் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 7,709,560 செலவிடப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரின் தாமதம் மற்றும் அமைச்சினால் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் போதிய செயலாற்றலொன்று பெற்றுக் கொள்ளப்படவில்லை.

(ஈ) சம்மாந்துறை கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2003 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆண்டு வரை ரூபா 2,275,000 தொகையான நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. கலாசார நிலையம் திறக்கப்பட்டு நிகழ்ச்சிகள் மேற்கொள்வதற்கு இயலுமாக இருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலையத்தை திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

----------------------------------------------------------------------------------------------------------

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) 2014 யூன் 10 ஆந் திகதி முதல் 15 திகதி வரை பிரான்ஸின் பரிஸ் நகரத்தில் நடைபெற்ற பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர அவர்களின் 100 ஆவது ஜனன தின நூற்றாண்டு விழாவிற்கான செலவினம் தொடர்பாக இடம்பெற்ற தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்கூறப்பட்ட விடயத்திற்காக அமைச்சினால் பிரான்சின் இலங்கை தூதரகத்திற்கு ரூபா 3,702,309 (யூரோ 20,500) அனுப்பப்பட்டிருந்தது.

அத்தொகைக்குரிய பற்றுச்சீட்டு மற்றும் செலவின விபரங்களுடன் எஞ்சிய பணத்தை மீண்டும் அமைச்சிற்கு பெற்றுக்கொள்வதற்கு 2015 ஆகஸ்ட் 31 திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சினால் ரூபா 10,075,687 ஒதுக்கப்பட்டு பிரான்ஸ் பரிஸ் நகர பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர 100 ஆவது ஜனன தின விழாவில் வட்ட மேசை மாநாடொன்று இடம்பெற்றிருந்தது. அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் கலந்துரையாடிய விடயங்களின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக எந்தவித தகவல்களும் அமைச்சினால் பேணப்படுகின்ற கோவைகளிலுள்ள தகவல்களினால் உறுதிப்படுத்தப்படாததுடன், அதனால் இலங்கை அரசுக்கு அல்லது அமைச்சிற்கு கிடைத்த பிரதிபலன் தொடர்பான தகவல்களும் விவரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இச்சுற்றுலாவிற்காக கலாசார அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களிலிருந்து கலந்துகொண்ட எந்தவொரு உத்ததியோகத்தரும் சுற்றுலா தொடர்பாக எவ்வித அறிக்கைகளையும் சமர்ப்பித்திருக்கவில்லை.

(iii) பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர 100 ஆவது ஜனன தின விழா நிகழ்விற்காக பிரான்ஸ் பரிஸ் நகரில் நடைபெற்ற விழாவில் கலந்து கொள்வதற்காக கலாசார மற்றும் கலை தொடர்பான அமைச்சின் விடயத்தின் கீழுள்ள நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மாத்திரம் சுற்றுலாவிற்கான செலவினங்களை அமைச்சினால் செலவிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்கு முரணாக அவ்விழாவில் கலந்துக்கொண்ட வெளி கம்பனியொன்றின் தலைவரொருவருக்காக விமான பயணச்சீட்டு கட்டணம், இணைந்த படிகள் மற்றும் அமையப் படிகளாக ரூபா 540,316 தொகையும், வேறு இரு வெளிநபர்களின் விமான பயணச்சீட்டுக்களுக்காக ரூபா 232,000 தொகையும் அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) தாய்லாந்து Ayutthya நகரத்தில் 2014 மே 9 திகதி முதல் 11 திகதி வரையான காலப்பகுதிக்குள் நடைபெற்ற வெசாக் தின கொண்டாட்ட விழாவில் அமைச்சின் பதவியணியனருடன் 07 பிரதேச சபை உறுப்பினர்களும் 04 வெளிநபர்களும் கலந்து கொண்டிருந்தனர். அந்நபர்களுக்கு சுற்றுலாவிற்காக அமைச்சினால் ரூபா

452,100 செலவிடப்பட்டிருந்தது. சுற்றுலாவிற்காக இந்நபர்களின் பணி என்ன என்பது தொடர்பாக கணக்காய்வுக்கு விபரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஏப்ரல் 28 திகதி கலாசார அலுவல்கள் அமைச்சருக்கு மல்வத்து மஹா விஹாரையினால் வழங்கப்பட்டிருந்த கௌரவ விருதினை பாராட்டுவதற்காக தனியார் அமைப்பொன்றினால் 2014 யூன் 01 திகதி மற்றும் 2014 ஆகஸ்ட் 13 திகதி நடாத்தப்பட்டிருந்த கௌரவிப்பு விழாவிற்காக அமைச்சு ரூபா 617,950 செலவிடப்பட்டிருந்தது. இக்கொடுப்பனவு நிதிப் பிரமாணம் 128(1)(ஐ) ஏற்பாடுகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) ஆரம்ப திரைப்பட காட்சியை கண்டுகளிப்பதற்காக பிரசித்தி பெற்ற தணிக்கை குழுவின் தலைவருக்கு படியொன்று வழங்கப்பட்டிருந்த போதும் இதில் கலந்து கொண்டதனை உறுதிப்படுத்துவதற்கு வருகை மற்றும் வெளியேறல் பதிவேட்டில் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு வருகை மற்றும் வெளியேறலை உறுதிப்படுத்தப்படாது திரைப்படங்களின் முதல் காட்சியை பார்ப்பதற்கு கலந்து கொண்டமைதற்காக 2014 வருடத்தில் ரூபா 156,000 படிகள் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(உ) 2014 செப்தம்பர் 24 ஆந் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை இந்தியாவில் நடந்த சார்க் கலாசார அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொண்ட நடனக் குழுவின் முகாமையாளராக, அமைச்சின் உத்தியோகத்தரோ அல்லது அரச நாடன உப சபையின் உறுப்பினரோ அல்லாத நபரொருவர் கலந்து கொண்டிருந்தார். நடனத் துறையுடன் எவ்வித தொடர்பும் இல்லாத அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளரொருவரும் குழுவின் முகாமையாராக கலந்து கொண்டிருந்தார்.

(ஊ) 2014 ஏப்ரல் 08 ஆந் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை வங்காளதேசத்தில் நடைபெற்ற SARAC Artist Camp & Exhibition of Paintings 2014 சுற்றுலாவிற்காக புறப்பட்ட குழுவின் முகாமையாளராக கலைத் துறையுடன் எவ்வித தொடர்புமற்ற உத்தியோகத்தர் ஒருவர் கலந்து கொண்டிருந்தார். குறிப்பிட்ட விடயம் தொடர்பாக புலமையுள்ள ஒருவர் முகாமையாளராக கலந்துக் கொள்ளாமையும் மற்றும் விடயத்திற்கு தொடர்பற்ற உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கான தேவை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

**3.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் இருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) அரசின் கொள்வனவு வழிகாட்டல் செயற்பாடுகளிலிருந்து விலகல்**

இலங்கை கலைச் சபை நடாத்திச் செல்லப்பட்ட பழைய கட்டிடத்திற்கு 2014 திசெம்பர் மாதம் வரை மாதாந்த வாடகை ரூபா 50,000 ஆகவும், 2015 ஆண்டிலிருந்து மாதாந்த வாடகை ரூபா 85,000 ஆகவும் செலுத்தலாம் என அக்கட்டிட உரிமையாளரால் கூறப்பட்டிருந்தது. அது தொடர்பாக கவனத்திற் கொள்ளாது பழைய கட்டிடத்தின் வாடகைக் காலம் முடிவடைந்த பின்னர் மாதமொன்றுக்கு ரூபா 145,000 வாடகையின் கீழ் வேறு கட்டிடமொன்று 2014 திசெம்பர் மாதம் முதல் பெறப்பட்டிருந்தது. அக் கட்டிடத்திற்காக 03 ஆண்டுகளுக்கு ரூபா 5,220,000 ஆன குத்தகை ஒப்பந்தத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் முதலாவது ஆண்டின் வாடகையாக ரூபா 1,740,000 தொகை 2014 நவம்பர் 04 திகதி செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் புதிய கட்டிடமொன்றைப் பெற்றுக்கொள்ளும் போது போட்டி விலை கோரப்படாமையால் வெளிப்படையான தன்மையின்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாதம்பை கலாசார நிலையத்தின் 1 ஆம் கட்ட நிர்மாணத்திற்காக 2013 மே 14 திகதி தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டின் படி கிரயம் (construction cost) ரூபா 5,089,033 ஆக இருந்தது. அதற்கு மதிப்பீட்டுக் கிரயத்தின் 5 சதவீத எதிர்பாரா செலவிற்கு ரூபா 254,452 இடமளிக்கப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்திருந்த இறுதி பற்றுச்சீட்டின் படி எதிர்பாரா செலவினத்திற்கு பட்டியலிடப்பட்ட பெறுமதி (Excess work and Extra work) ரூபா 590,275 ஆன மதிப்பீட்டுக் கிரயத்தில் 11.6 சதவீதமாக இருந்தது. அதன் படி இடமளிக்கப்பட்டிருந்த கிரயம் ரூபா 335,824 ஆல்

விஞ்சி ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதும் அதற்கான முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) தாய்லாந்து வெசாக் கொண்டாட்ட விழாவிற்காக 2014 மே 07 திகதி முதல் 13 திகதி வரையான காலப்பகுதியினுள் சமூகமளித்த அமைச்சர் உட்பட 33 பேருக்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் 2014 மே 19 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் 36 பேர் சுற்றுலாவில் பங்குபற்றியிருந்தனர். ஜனாதிபதியின் அங்கீகாரமின்றி 4 பேர் அதில் கலந்து கொண்டிருந்தனர்.

(iii) பிரசித்த தணிக்கை கட்டுப்பாட்டுச் சபையிடமிருந்து DVD மற்றும் VCD இறுவெட்டுக்களிற்காக சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பதாரி களிடமிருந்து ரூபா 1,000 ஆன கட்டணமொன்றை அறவிடல் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் படி இடம்பெற்றிருந்தது. அதற்காக பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தினதோ அல்லது வேறு ஏதேனும் முறையான அதிகாரத்துடன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் சனவரி மாதம் முதல் ஒக்தோபர் மாதம் வரையான காலப்பகுதியினுள் 188 DVD தட்டுக்களுக்காக விண்ணப்பதாரிகளிடமிருந்து ரூபா 188,000 கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

## 3.13 நட்டங்களும் சேதங்களும்

---

மாதம்பை கலாசார நிலையத்தின் I ஆம் கட்ட நிர்மாணத்திற்கு ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்திருந்த ரூபா 5,380,780 கூறுவிலையில் பெறுமதி 8 சதவீத கழிவொன்றை கழித்து நிர்மாணத்தை பூர்த்தி செய்வது என்ற இணக்கத்துடன், ஒப்பந்தம் கையளிக்கப்படடிருந்தது. அதன்படி இறுதிக் கொடுப்பனவுப் பட்டியலில் ரூபா 5,097,821 உறுதிப்படுத்தப்பட்ட வேலைப் பெறுமதியின் 08 சதவீதம் கழிக்கப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், அப்பட்டியலின் முழுத்தொகையும் செலுத்தப்பட்டமையால் அமைச்சினால் ரூபா 407,826 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.14 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திம்புலாகலை கலாசார நிலையத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 1,375,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 16 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அந்நிர்மாணத்தை மேற்கொண்ட மஹவெலி அதிகாரசபைக்குரிய அரலகங்வில காணி மற்றும் கட்டிடம் என்பவற்றை கலாசார அமைச்சிற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.15 தீர்வு காணப்பட்டிராத கணக்காய்வு பந்திகள்

அமைச்சின் முன்னைய ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அமைச்சினால் சீர் செய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு பின்வருமாறாகும்.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புபடுத்தப்பட்ட விடயம் |
|---|---|---|---|
| | ஆண்டு | பந்தி இல. | |
| (i) | 2012<br>2013 | 4.5<br>5.5 | **மத்திய கலாசார நிதியம்**<br>பொலன்னவை புனித பூமியின் நுழைவு வாயிலிருந்து உள்ளக நுளைவு பாதையை 1 கி.மீ தூரத்திற்கு சீமேந்து கற்கள் பதித்துத் திருத்தஞ் செய்யும் செயற்பாடு ஒப்பந்தக் கம்பனியொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன் போது உரிய தரத்தில் இல்லாத நிர்மாணித்திற்காக ரூபா 22,099,917 தொகையும், நிறைவேற்றப்படாத வேலைக்காக ரூபா 4,660,998 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br>உரிய தரத்தில் நிர்மாணம் மேற்கொள்ளப்படாமை தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2013 | 4.4(அ) | வெளிநாட்டு சுற்றுலா நுழைவுச் சீட்டுக்களுடன் இலவசமாக வழங்குவதற்காக சீகிரியா, பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரசித்தி பெற்ற இடங்களை உள்ளடக்கி 5 இலட்சம் DVD இறுவெட்டுக்களைத் தயாரிப்பதற்காக திரைப்பட பணிப்பாளரொரு வருக்கு ரூபா 51,099,925 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தக்காரரால் முன்னர் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட விவரண திரைப்படங்களின் காட்சிகளை கணனி பிரதிகளினூடாக மீண்டும் தயாரித்து புதிய நிர்மாணமொன்றாக மோசடியாக வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே அவருக்கு இவ்விடயங்கள் தொடர்பாக முன்னர் வழங்கப்பட்ட ரூபா 4,701,000 ஆன ஒப்பந்தமொன்றை மீறியிருந்தமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட குறைந்த கூறுவிலை கருத்திற் கொள்ளப்படாமல் கூடிய கூறுவிலை தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக ரூா 18,125,000 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், கேள்விப் பாதுகாப்பு மற்றும் செயலாற்றல் பெறுமதியில் ரூபா 2,757,500 குறைத்து ஒப்பந்தக்காரரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |
| (iii) | 2013 | 4.4(ஆ) | வயம்ப கலாசார சதுக்கத்தில் வேலைத் தலங்களில் வேலை செய்வதற்காக பயிற்சி பாதுகாப்பு / அகழ்வு உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் வரையறுக்கப்பட்ட கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாண கம்பனியிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 114,879,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியால் நிதியத்தின் ஊழியர்களைப் |

ஈடுபடுத்தி நிதியத்தின் நிர்மாண மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு அந்த ஊழியர்களுக்கு கம்பனியால் சம்பளம் செலுத்தப்பட வேண்டும். அதற்குப் பதிலாக கம்பனியின் ஊழியர்களுக்காக நிதியத்திலிருந்து சம்பளம் கொடுப்பனவு செய்வதற்கு இணங்கி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

உடன்படிக்கையின் பிரகாரம் உழைப்பு மனித நாளொன்றிற்கு நிதியத்தினால் ரூபா 1,200 தொகை கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், கம்பனியால் தொழிலாளருக்கு ரூபா 700 செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொண்ட 95,732 மனித நாட்களுக்காக ரூபா 47,866,000 ஆன இலாபமொன்றை உழைப்பதற்கு கம்பனிக்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன், அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக நடவடிக்கை எடுத்த கம்பனி தொடர்பாக எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.16 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அமைச்சினால் 170 பிரதேச கலாசார நிலையங்கள் தாபிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 889 பதவியணியினர் இணைக்கப்பட்டிருந்தனர். பிரதேச கலாசார நிலையங்களில் பதவியணியினரின் வருகை, வெளியேறல், வெளியிடங்களுக்குச் செல்லல், விடுமுறை மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் என்பவற்றைப் பேணுதல் தொடர்பாக காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை நலிவாக இருந்தமையும் அதற்கான முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று தாபிக்கப்பட வேண்டியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 3.17 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 13 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 579 | 515 | 64 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 409 | 403 | 06 | - |
| (v) | அமைய | - | 183 | - | 183 |
| | மொத்தம் | 1,007 | 1,116 | 74 | 183 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 74 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. தலைப்பு 206 – கலாசார அலுவல்கள் திணைக்களம்

### 4.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

திணைக்களத்தினால் 2015 மார்ச் 31 ஆந் திகதி அளவிலும் 20601 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த இணக்கக் கூற்று 01 மாதம் 21 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2015 மே 21 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 4.2 ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பராமரிக்கப்படாமை

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாமல் இருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | கணனி உதிரிப் பாகங்கள் மற்றும் மென் பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப் பண) பேரேடு | நிதிப்பிரமாணம் 447 | முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை |
| (iv) | காசுக் கட்டளைக்கான பதிவேடு | நிதிப் பிரமாணம் 451 | முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை |
| (v) | கடமை தொலைபேசி பதிவேடு | நிதிப் பிரமாணம் 845(1) | முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை |
| (vi) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | பொது வைப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 565 மற்றும் 569 | முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை |

## 4.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் கலைக்களஞ்சிய அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக கட்டிடமொன்று ரூபா 260,000 தொகை வீதம் மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போது பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடப்பட்டு விலை விபரங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய கொள்வனவு ஆவணங்கள்,

கிடைத்த கூறு விலை விபரங்கள், கொள்வனவுத் தீர்மானங்கள் மற்றும் ஒப்பந்தத்தை வழங்குதல் போன்ற விபரங்கள் தொடர்பாக போதியளவு தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளில் காணப்படவில்லை. அதன் பிரகாரம் அக்கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படையான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) திணைக்களத்தின் குழாமில் காணப்பட்ட மோட்டார் வண்டியொன்று 2013 ஆம் ஆண்டு முதல் 2015 மே மாதம் வரையான காலப்பகுதியில் 8574 லீற்றர் எரிபொருள் செலவிடப்பட்டு 77,211 கி.மீ. தூரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அவ்வாகனம் ஈடுபடுத்தப்பட்ட கடமை மற்றும் அதனைப் பயன்படுத்தியவர் யார் என்பதை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அக்காலப்பகுதியில் வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியேகத்தர் யாரென ஓட்டக் குறிப்புக்களில் எழுதப்படாதிருந்ததுடன், அவரின் கையொப்பமும் இடம்பெற்றிருக்கவில்லை.

## 4.4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2015 யூலை 15 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்காததுடன், அந்த ஐயவினாக்களுக்குட்பட்ட கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 37,472,148 ஆக இருந்தது.

## 4.5 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 4.5.1 பாதீட்டு முரண்கள்

08 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்களை விஞ்சி ரூபா 10,836,906 ஆன பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 18 செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடு 2014 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் பயன்படுத்தி முடிவடைந்ததன் பின்னரும் மீளாய்வாண்டிற்காக மேலும் ரூபா 5,785,085 ஆன பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**4.6 கட்டுநிதிக் கணக்கு**

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக 28 பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 705 சந்தர்ப்பங்களின் போது ரூபா 14,278,280 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் கலாசார அலுவல்கள் பணிப்பாளரால் 59 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 2,267,700 கூட்டுப்பெறுமதியான செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்ப்பனவு 1 மாதம் முதல் 8 மாதம் வரையான காலம் தாமதிக்கப்பட்டிருந்தன. மேலும் 40 பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 247 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 4,297,085 ஆன செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்ப்பனவு 2 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரையான காலம் தாமதிக்கப்பட்டிருந்தன.

(இ) 2011 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய TO/TM/HRD/02/50 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் அங்கீகாரத்திற்கு முரணாக 8 சந்தர்ப்பங்களின் போது 8 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 568,250 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) நிதிப்பிரமாணம் 371(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக முன்னர் பெற்றுக்கொண்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்வுசெய்வதற்கு முன்னர் மீண்டும் செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கலாசார அலுவல்கள் பணிப்பாளரால் 2014 மார்ச் 05 ஆந் திகதி முற்பணம் பெற்றுக்கொள்ளும் போது அதற்கு முன்னர் 16 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 458,900 தொகையும், 2014 ஏப்ரல் 24 ஆந் திகதி முற்பணம் பெற்றுக்கொள்ளும் போது அதற்கு முன்னர் 37 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 1,471,950 தொகையும், 2014 செப்தம்பர் 23 ஆந் திகதி முற்பணம் பெற்றுக்கொள்ளும் போது அதற்கு முன்னர் 19 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 706,550 தொகையுமாக கட்டுநிதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 3 பதவிநிலைத் தரமல்லாத

உத்தியோகத்தர்களால் 86 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட ரூபா 1,443,950 ஆன செயல்நிமித்த உப கட்டுநிதியை தீர்ப்பதற்கு முன்னர் மீண்டும் செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(உ) நிதிப்பிரமாணம் 371(2) இன் பிரகாரம் பெற்றுக்கொண்ட செயல்நிமித்த உப கட்டுநிதிகளில் செலவிடப்படாத எஞ்சிய பணம் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 3 உத்தியோகத்தர்களால் 3 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 55,000 ஆன முற்பணத்தை செலவிடாமல் மீண்டும் பணமாக தீர்ப்பதற்கு 10 நாட்கள், 20 நாட்கள் மற்றும் 79 நாட்கள் எனத் தாமதிக்கப்பட்டிருந்தன. மேலும் 9 உத்தியோகத்தர்களுக்கு 11 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 457,325 ஆன முற்பணம் உரிய செயற்பாட்டிற்கு பயன்படுத்தி எஞ்சிய ரூபா 70,801 தொகையினைத் தீர்ப்பதற்கு 10 நாட்கள் முதல் 207 நாட்கள் வரையான காலவீச்சில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

**4.7 பொது வைப்புக் கணக்கு**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 6,479,505 மொத்தப் பெறுமதியான 196 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கலைஞர்களுக்கான தேசிய நம்பிக்கைப் பொறுப்பிற்காக நிதியப் பெறுவனவாக பொது நம்பிக்கையாளர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய ரூபா 670,924 தொகையான கொடி விற்பனை வருமானம் அத்திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நானாவித வைப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் நிறுத்த வைத்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 6,087,930 தொகை 01 ஆண்டு காலத்தை விஞ்சியிருந்தது. இந்நிறுத்தி வைத்தல்கள் தொடர்பாக நிர்மாண உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.8 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

---

20601 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,071,525 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகளில் இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 90,568 தொகை 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும், ஓய்வு பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 155,700 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாகவும், வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 178,780 தொகை 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும், சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 94,523 தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் நிலுவையாக காணப்பட்டன. அக்கடன் மீதிகள் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் வரவு மீதி மற்றும் திறைசேரி கணனி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் வரவு மீதி என்பவற்றிற்கிடையே ரூபா 444,761 ஆன வேறுபாடு காணப்பட்டது. அது தொடர்பாக 1994 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் இணக்கக்கூற்றில் காரணங்கள் தெளிவு படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த தனிப்பட்ட மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திணைக்கள கடன் முற்பண கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆண்டின் இறுதியில் வரவு மீதி என்பவற்றிற்கிடையே ரூபா 156,951 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. அவ் இணக்கமின்மை தொடர்பாக ரூபா 7,906 ஆன பெறுமதிக்காக மாத்திரம்

காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி சீராக்கப்பட்டதன் பின்னர் மேலும் வேறுபாடு ரூபா 164,857 ஆக இருந்தது.

(ஈ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பண இணக்கக் கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தனிப்பட்ட மீதிகளின் பட்டியல் மற்றும் பட்டோலைகள், 1994 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விபரங்கள் உள்ளடக்கப்பட்டு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.9 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று காணப்பட்ட போதிலும், அது வெற்றிடமாக காணப்பட்டது. கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவின் மூலம் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2014 ஆம் ஆண்டிற்காக 900 மனித மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தில் எவ்வித புலனாய்வொன்றோ அல்லது உள்ளகக் கணக்காய்வொன்றோ அப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.10 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் இனங்காணப்பட்ட 9 வளவுகளின் அவ்வறிக்கை

2015 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளும் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்**

பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர நடனப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவகத்தை நிர்மாணிப்பதற்காக திணைக்களத்தினால் ராஜகிரிய கலபலுவாவ பிரதேசத்தில் கைவிடப்பட்டிருந்த பாடசாலைக் காணி மற்றும் அதன் கட்டிடங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. இக்காணியின் உரித்தை முறையாக கையேற்காமல் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நிர்மாண நடவடிக்கைளுக்காக ரூபா 11,312,248 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 3,147,007 தொகை எதிர்காலத்தில் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 36,429,076 ஆக இருந்ததுடன், அப்பொறுப்புக்கள் 01 ஆண்டிற்கு குறைந்த காலப்பகுதியில் இருந்து வரும் மீதியாக இருந்தது.

## 4.11 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப்பிரமாணம் 396 | 451,219 | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விநியோகிக்கப்பட்ட போதும் 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 451,219 கூட்டுத்தொகையான 97 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 835(1) | 3,120,000 | கலைக்களஞ்சிய அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக மாதாந்தம் ரூபா 260,000 தொகை வீதம் வாடகை அடிப்படையில் கட்டிடமொன்று பெற்றுக்கொள்ளும் போது அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 128(1) (இ) மற்றும் 156(7),(8) | 16,867,402 | திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு செயல்நிமித்த கட்டுநிதி வழங்கும் போதும் அதிலிருந்து செலவிடும் போதும் கட்டுப்பாடின்றியும் வரையரையின்றியும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (iv) நிதிப்பிரமாணம் 341(1) | - | திணைக்களத்தின் வாகன எரிபொருள் கட்டளை தொடரிலக்கம் வரிசைக் கிரமமாக பதிவுசெய்வதற்காக அடியிதழ் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை

---------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க சுற்றறிக்கை | | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் மூலம் அமைய நியமனம் எதுவும் மேற்கொள்ள கூடாதென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2014 நவம்பர் 16 ஆந் திகதி முதல் அமைய சாரதி நியமனமொன்று வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | 1980 ஏப்ரல் 01 ஆந் திகதிய 162 ஆம் இலக்க சுற்றறிக்கை | 154,030 | ஊழியரொருவர் சேவைக்கு வருகை தரல் மற்றும் வெளியேறல் என்பவற்றை உறுதிப் படுத்தாமல் சம்பளம் அல்லது படிகள் செலுத்த முடியாத போதிலும், 2014 நவம்பர் 16 ஆந் திகதி முதல் அமைய ஊழியர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்த மேற்குறித்த ஊழியர் கைவிரலடையால இயந்திரத்திலோ அல்லது வருகைப் பதிவேடொன்றிலோ தமது வருகை மற்றும் வெளியேறல் பதிவு செய்யாதிருக்கையில் 2014 திசெம்பர் முதல் 2015 ஏப்ரல் வரை படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | | அரசின் எல்லா வாகனங்களும் 06 மாதங்களுக்கு ஒரு முறை எரிபொருள் எரிவு தொடர்பாக பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (iv) | 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க சுற்றறிக்கையினால் | | அரசிற்குச் சொந்தமான குழாம் வாகனங்களிலும் அரச இலட்சிணை மற்றும் அமைச்சின் பெயர் பொறிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்திற்குச் |

| | | | |
|---|---|---|---|
| | திருத்தம் செய்யப்பட்ட 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க சுற்றறிக்கை | | சொந்தமான 18 குழாம் வாகனங்கள் தொடர்பாக அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) | அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவை | | |
| (i) | 3.2, 4.3 மற்றும் 4.3.2 வழிகாட்டல் | 9,671,529 | 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ரூபவாஹினி அரச விருது வழங்கல் விழாவிற்காக அனுசரணையாளரைத் தெரிவுசெய்யும் போது தேசிய ரீதியில் போட்டி விலை கோரப்படாமல் கலாசார அலுவல்கள் பணிப்பாளர் நாயகத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் 2 வெளி நிறுவனங்களுக்கு அச்செயற்பாடு கையளிக்கப்பட்டிருந்தது.<br><br>அவ்வாறே அந்த விழாவை நடத்துவதற்காக திணைக்களத்தால் சகல செலவினங்களையும் உள்ளடக்கிய மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 3.4.3(ஆ) வழிகாட்டல் | 669,900 | 2014 நவம்பர் மாதத்தின் போது நடைபெற்ற கலைஞர்களின் பரஸ்பர சந்திப்பிற்காக 3500 அழைப்பிதழ்கள் அச்சிடுவதற்கும் ''கலா கெதே ரன் அஸ்வனு'' என்ற பெயரில் புத்தகமொன்றின் 3000 பிரதிகளை அச்சிடுவதற்காக சந்தை ஒப்பீட்டு விலை முறைமையின் கீழ் விலை விபரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், அவ்விலைகள் கொள்வனவுக் குழுவிற்கு சமர்ப்பித்து அக்குழுவின் தீர்மானம் பெற்றுக் |

கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

**4.12 உள்நாட்டு நிதியளிப்புக்களின் கீழ் செயற்திட்டங்கள் அமுல்படுத்தல்**

---

செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாமல் கைவிடுதல் மற்றும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) செயற்திட்டங்களை நிறைவேற்றாமல் கைவிடுதல்**

---

2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த தேசிய கலாபவன மண்டபத்தை நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்காக ரூபா 170,000,000 ஆன கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 3,054,840 தொகை செலவிடப்பட்டிருந்தது. கலைஞர்கள் உட்பட வெவ்வேறு தரப்பினரின் எதிர்ப்பு கிளம்பியதால் கலந்துரையாடல் மூலம் இணக்கப்பாட்டிற்கு வந்து செயற்திட்டத்தை முன்கொண்டு செல்வதற்காக தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும், 2015 யூலை 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

---

ஜோன் த சில்வா ஞாபகார்த்த கலையரங்கத்தை மீளமைத்தல் செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 150,000,000 ஆக இருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது இச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 96,110,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் கொள்வனவு நடவடிக்கைககள் தாமதம் மற்றும் கலைஞர்களின் எதிர்ப்புக் காரணமாக இச்செயற்திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.13 செயலாற்றல்**

2014 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) திட்டமிடல்**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பின்வரும் சந்தர்பங்களில் செயற்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) திணைக்களத்தின் 2014 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர நடனப் பயிற்சி நிறுவகத்தின் நிர்மாணப்பணி உள்ளடக்கப்படாதிருந்த போதிலும், அதற்காக 2015 மார்ச் 20 திகதி வரையிலும் ரூபா 11,312,248 செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 3,147,007 தொகை பொறுப்புக்களாக செலுத்தப்பட வேண்டியிருந்தது.

(ii) செயற்திட்டத்திற்கு புறம்பாக 2014 நவம்பர் 11 திகதி நடைப்பெற்ற கலைஞர் நலச்சந்திப்பில் கலைஞர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக “கலா கெனே ரன் அஸ்வனு” என்ற பெயரில் புத்தகமொன்று ரூபா 669,900 செலவிடப்பட்டு அச்சிடப்பட்டிருந்தது.

திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டில் ரூபவாஹினி அரச விருது வழங்கும் விழாவை நடாத்துவதற்காக ரூபா 3,064,083 தொகையும், 2014 ஆம் ஆண்டில் அவ்விழாவை நடாத்துவதற்காக ரூபா 6,607,437 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. இவ்விழாவில் ரூபவாஹினி கலை நிகழ்ச்சிகள் பாராட்டப்பட்டிருந்ததுடன் இவ்விடயம் பொதுசன ஊடக அமைச்சின் விடயப்பரப்பிற்குரிய தொடர்புடைய பணியாக இணங்காணப்பட்டது. கலாசார திணைக்களம் நிறுவப்பட்டு 59 ஆண்டுகளாகியும் அதன் விடயப்பரப்புடன் தொடர்புடைய சில நோக்கங்கள் மற்றும் பணிகள் ஏனைய அரச நிறுவனங்களின் பிரதான நோக்கங்கள் மற்றும் பணிகளுடன் இணைந்திருந்தமை காரணமாக திணைக்களத்தினால் அதன் விடயப்பரப்பு உட்பட நோக்கங்கள் மற்றும் பணிகள் தற்காலத்திற்கு பொருந்தும் வகையில் திருத்தயமைப்பதற்கு

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.14 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையுடையதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

(அ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்காக நடாத்தப்பட்ட ரூபவாஹினி அரச விருது வழங்கும் விழாவிற்கு அனுசரணை நிறுவனத்துடன் கலாசார திணைக்களம் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் படி அனுசரணை நிறுவனத்தினால் செலவிடப்பட வேண்டிய செலவுகளை அவ் அனுசரணை நிறுவனத்தினால் கொடுப்பனவு புறக்கணிக்கப்பட்ட காரணத்தினால் திணைக்கள நிதி ஏற்பாட்டின் மூலம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2013 மற்றும் 2014 ஆண்டுகளிற்காக முறையே ரூபா 2,219,083 மற்றும் ரூபா 2,020,171 தொகை இவ்வாறு திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட அனுசரணை நிறுவனத்தினால் 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் கொடுப்பனவு புறக்கணிக்கப்பட்டு 2015 மே 31 ஆம் திகதியில் உள்ளவாறு முறையே 17 மாதங்கள் மற்றும் 07 மாதங்கள் கடந்திருந்த போதிலும் திணைக்களத்தினால் ஒப்பந்தப்படி செயற்பட்டு உரிய அனுசரணைக் கட்டணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்திற்குரிய வாகனத்தில் பயணம் செய்த உத்தியோகத்தர் தொடர்பான விபரங்கள், பயணம் மற்றும் தூரத்தின் அளவு உள்ளடக்கப்படாத குறிப்பொன்று பேணப்பட்டிருந்ததோடு அவ்வாகனத்தில் பயணம் செய்த உத்தியோகத்தர் கையொப்பம் இடாமல் அதற்குப் பதிலாக வாகனத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் அதில் கையொப்பம் இட்டிருந்தார். விடய எழுதுவினைஞரினால் தயாரிக்கப்பட்ட அக்குறிப்புக்கள் நிர்வாக உத்தியோகத்தரினால் பரீட்சிக்கப்படாமல் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இதனால் திணைக்களத்திற்குரிய வாகனங்களை செலுத்துவது மற்றும் எரிபொருள் தொடர்பான கட்டுப்பாடு பலவீனமான நிலையிலேயே காணப்பட்டது.

## 4.15 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் இருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

### (அ) அரசின் கொள்வனவு வழிகாட்டி செயற்பாடுகளிலிருந்து விலகல்

---

(அ) பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர நடனப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவகத்தை நிர்மாணிப்பதற்காக 2015 மார்ச் 20 திகதி வரை ரூபா 11,312,248 செலவிடப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் செலுத்துவதற்காக ரூபா 3,147,007 தொகையான செலவினக் கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இது தெடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்நிர்மாணம் மற்றும் அது தொடர்பான கொள்வனவுகளுக்காக பிரதான கண்கீட்டு உத்தியோகத்தராக கலாசார மற்றும் கலை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இத்திட்டம் தொடர்பாக விரிவான அறிக்கையொன்று தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.2.1 வழிகாட்டலின் பிரகாரம் மேற்கூறப்பட்ட பணிகள் போட்டி விலை கோரல் ஊடாக திறந்த போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் கலாசார திணைக்களத்திடம் போதுமான ஊழியர்கள் மற்றும் உபகரண வசதிகள் இல்லாமலிருந்த போதும் அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.7 வழிகாட்டலிற்கு முரணாக செயற்பட்டு நேர் உழைப்பு மற்றும் நேர் மூலப்பொருள் விலை அடிப்படையின் கீழ் மேற்குறித்த நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.3.1 வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவு தேவையை தீர்மானிக்கும் ஒரு அடிப்படை இருக்க வேண்டிய போதிலும், இந்த நடன பயிற்சி நிறுவனத்தை நடாத்தி செல்வதற்கான அடிப்படை, ஆட்சேர்ப்பதற்கான முறைமை, நிதி நடவடிக்கைகளை நிர்வகிப்பது தொடர்பான நிலைப்பாடு, நிறுவன ரீதியான நிர்வாகம் போன்ற அடிப்படை தேவைகளுக்கான செயன்முறைகள் தயார்படுத்தாமல் நிர்மாணத்திற்காக பணிக்காக செலவிடப்பட்டிருந்தது.

(iv) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.2 வழிக்காட்டலின் படி இதற்காக கொள்வனவு திட்டமொன்றோ அல்லது கொள்வனவு காலஅட்டவணையொன்றோ காணப்படவில்லை. மேலும் நிர்மாணத்திற்கான அனைத்து செலவினங்களும் உள்ளடக்கப்பட்டு மொத்த கிரய மதிப்பீடொன்று திணைக்களத்தினால் தயாரிக்கப்படாதிருந்ததுடன், முறையாக தயாரிக்கப்பட்ட திட்டம் மற்றும் அளவீட்டு பத்திரம் காணப்படவில்லை. அத்துடன் நிதிப்பிரமாணம் 237(அ) இன் பிரகாரம் செய்யப்பட்ட வேலை அறிக்கை மற்றும் கொடுப்பனவுப் பட்டியல் என்பன தகுதிவாய்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் பரிந்துரை செய்யப்படாதிருந்ததுடன் நிர்மாண வேலைகள் தகுதிவாய்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படாதிருந்தது.

(v) இந் நிர்மாணப்பணிக்குரிய ரூபா 2,841,670 பெறுமதியான 4 கொள்வனவு செயற்பாடுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கேள்வி ஆவணங்கள் முறையற்றதும் போலியானதுமாக இருந்ததுடன் அரசின் கொள்வனவு வழிகாட்டலுக்கு புறம்பாக பெறப்பட்டிருந்ததொன்றாக அவதானிக்கப்பட்டது.

**(ஆ) அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் ரூபவாஹினி அரச விருது வழங்கும் விழாவை நடாத்துவதற்காக முறையே ரூபா 3,064,083 மற்றும் ரூபா 6,607,437 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு நிதி ஏற்பாடு செய்யப்படாமல் தேசிய கலை விழாவை நடாத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு இதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) ஜோன் த சில்வா அரங்கினை நவீனமயப்படுத்தல் மற்றும் தேசிய கலாபவன புனரமைப்பு செயற்திட்டத்திற்காக ரூபா 377,700,000 கிரய மதிப்பீடு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. உரிய ஒப்பந்தம் ரூபா 432,977,817 (பெறுமதி சேர் வரியுடன்) இற்கு 2014 நவம்பர் 04 திகதி கையளிக்கப்பட்டிருந்தது அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு எல்லையை விஞ்சி ரூபா 110,277,817 இற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அத்திட்டத்திற்கான மொத்தச் செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிக்கும் போது அதற்காக திருத்தப்பட்ட கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.15 நிதி மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தின் வாகன குழாமிற்குரிய மோட்டார் வாகனமொன்று 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 மே 11 திகதி வரை 77211 கி.மீ. ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் எரிபொருளுக்காக ரூபா 1,276,077 தொகை செலவிடப்பட்டிருந்தது. இம் முழுக்காலத்திற்குரிய ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், மோட்டார் வாகனம் உபயோகிக்கப்பட்டது எந்த செயற்பாடுகளுக்காக, யாருடைய தேவைக்காக என்பதும் அதனை பயன்படுத்திய உத்தியோகத்தர் யார் என்பது தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. அத்துடன் வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் ரூபா

800,199 ஆன எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.16 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) தேசிய கலாபவனத்தின் புனர்நிர்மாண செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் கைவிடப்பட்டதனால் அத்திட்டத்தை தயாரிப்பதற்காக பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,837,840 தொகையும், ஆய்வறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 217,000 தொகையும், சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக காணப்பட்டன.

(ஆ) திணைக்களத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற கலைக்களஞ்சிய அலுவலகத்தினை நடாத்தி செல்வதற்காக கட்டிடமொன்று, 2007 ஜனவரி தொடக்கம் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 3653 சதுர அடியை கொண்ட அக்கட்டிடத்தில் 1138 சதுர அடி அளவிலான இடஅளவு வாடகைக்கு பெறப்பட்ட திகதியிலிருந்து குறைந்த பயன்பாடுடன் காணப்பட்டது.

(ii) கட்டிடத்திற்காக மாதாந்த வாடகையாக 2007 ஆம் ஆண்டு முதல் 2013 மே மாதம் வரை ரூபா 250,000 வீதம் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2013 யூன் மாதம் முதல் ரூபா 260,000 வீதம் 2015 மே மாதம் வரையிலும் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி இந்த இட அளவிற்காக 2007 ஆம் ஆண்டு முதல் 2015 மே மாதம் வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 7,940,042 சிக்கனமற்ற செலவினமாக காணப்பட்டது.

(iii) 2007 ஆம் ஆண்டின் அரச விலை மதிப்பாளரின் பரிந்துரையின் பிரகாரம் கட்டிடத்தின் மாதாந்த வாடகை ரூபா 175,000 ஆக இருந்த போதிலும், கட்டிடத்திற்காக ரூபா 250,000 மாதாந்த வாடகை செலுத்தப்பட்டிருந்தமையால் 2007 சனவரி மாதம் தொடக்கம் 2015 மே மாதம் வரை அரசின் நிதி ரூபா 5,400,000 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 4.17 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 28 | 11 | 17 |
| (ii) | மூன்றாம் நிலை | 3 | 2 | 1 |
| (iii) | இரண்டாம் நிலை | 524 | 457 | 67 |
| (iv) | ஆரம்ப நிலை | 167 | 118 | 49 |
| | மொத்தம் | 722 | 588 | 134 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 134 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையில் 18 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தது. அவ்வாறே திணைக்களத்தின் 28 சிரேஷ்ட நிலையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 17 வெற்றிடங்கள் காணப்பட்டமை திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகள் சீரற்ற நிலையில் இருப்பதற்காக நேரடியாகத் தாக்கமளித்திருந்தன.